**செய்தி வெளியீடு எண்: 802** **நாள்: 30.12.2011**

பத்திரிக்கைச் செய்தி

**மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ந.சுப்ரமணியன் அவர்களின் ஆய்வுக்கூட்டம்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்குரிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு 2011–2012ம் ஆண்டுக்கு ரூ. 1084.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை மாணவ/மாணவியர் கல்வி உதவித்தொகை, வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல், இணைப்புச்சாலை அமைத்தல், மயானம் மற்றும் மயானப்பாதை அமைத்தல், கல்விமேம்பாடு மற்றும் விடுதி நிர்வாகம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படித் திட்டங்களை உரிய காலத்தில் முடித்து அதன் பயன்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களைச் சென்றடையும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆணைப்படி 27.12.2011 மற்றும் 28.12.2011 ஆகிய இரு நாட்களில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சென்னை–5, எழிலகம், நகராட்சி நிர்வாக கூட்ட அரங்கில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது **அவ்வமயம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரிந்து பணியிலிருக்கும் போது மரணமடைந்த அரசு பணியாளர்களின் வாரிசுகளில் மாண்புமிகு முதலமைச்சரின் ஆணையின்படி 9 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் / தட்டச்சராக நியமனம் செய்யப்பட்ட ஆணையை வழங்கினார்.**

மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை செயலர், ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மற்றும் இதர உயர் அலுவலர்களும் கலந்துகொண்டனர். இவ்வாய்வுக்கூட்டத்தின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாணவ / மாணவியர்களுக்குரிய

கல்வி உதவித்தொகையை 31.01.2012–க்குள் ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட வேண்டும் எனவும், இப்பணியை தொய்வின்றி செயல்படுத்துமாறும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்

அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குதல், இணைப்புச்சாலை மயானம் மற்றும் மயானப்பாதை மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதில் முனைப்புடன் செயல்பட்டு திட்டங்களை விரைவில் செயல்படுத்துமாறும் அறிவுறுத்தினார்.

பெண்கல்வி ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ் இந்நிதியாண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.40.00 கோடி வழங்கியுள்ளார்கள் எனவும் இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 3 ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு உரிய காலத்தில் வழங்கிட ஆவன செய்யுமாறு அறிவுறுத்தினார். அரசின் அனைத்து திட்டங்களையும் முனைப்புடன் செயல்படுத்தி நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் நல்வாழ்வினை கருத்தில்கொண்டு தொலைநோக்கு பார்வையுடன் அயராது உழைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வகையில் அனைத்து பணிகளையும் விரைந்து செயல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களையும் அறிவுறுத்தினார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**